# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **65**

| | | | |
|---|---|---|---|
| Name: | துரைசிங்கம் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A-11 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 02.08.2023**

<u>முதல் விசாரணை</u>:

நான் தென்காசியில் அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் டிரைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தென்காசி மேலகரம் ஸ்டேட்பேங்க் காலனியில் குடியிருந்து வருகிறேன். கடந்த 14.08.2007ம் தேதி பகல் சுமார் காலை 11.20 மணிக்கு எங்கள் மருத்துவமனையிலிருந்து அனுப்பப்பட்ட மீரான் மைதீன் , செய்யதுஅலி, அபு அயுப் அன்சாரி மற்றும் பெயர் தெரியாத ஒரு நபர் ஆகிய நான்கு காயம்பட்ட நபர்களை நான் ஓட்டிய TN 76/G-0076 என்ற டெம்போ டிராவலர் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு, மேல்சிகிச்சைக்காக, திருநெல்வேலி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் கொண்டுபோய் சேர்த்து பின்னர் அன்றைய தினமே மாலை 5.40 மணிக்கு ஆம்புலன்சுடன், எங்கள் மருத்துவமனைக்கு திரும்பி வந்துவிட்டேன் . என்னை போலீசார் விசாரித்தார்கள்.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.

**<u>எதிரிகள் குறுக்குவிசாரணை</u>**

என்னை திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேற்படி நபர்களை கொண்டுசெல்ல நியமித்த பணி மருத்துவர் பெயர் விபரத்தை நான் போலீசார் விசாரணையில் நான் கூறவில்லை. நான் மருத்துவமனைக்கு சென்று பின்னர் அந்த வாகனத்திற்கான லாக்புத்தகத்தை பணி மருத்துவரிடம் காண்பித்தேன். அவ்வாறு நான் பணிமருத்துவரிடம் காண்பித்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறினேன். தென்காசி மருத்துவமனையில் காயம் பட்ட நபர்களுக்கான விபத்துபதிவேடு நகல் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்துவிட்டேன். திருநெல்வேலிக்கு மட்டும்தான் என் பணி காலத்தில் ஆம்புலன்சை ஓட்டியுள்ளேன். ஒருநாளுக்கு குறிப்பிட்ட கிலோமீட்டர் தூரம் மட்டும் ஆம்புலன்சை ஓட்டவேண்டும் என்ற வரைமுறை உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய அடையாள அட்டை மற்றும் ஓட்டுநர் உரிமம் ஆகியவற்றை விசாரணை அலுவலரிடம் ஒப்படைத்தேன். மொத்தம் 4 நபர்களை நான் அழைத்துசென்றேன். நான் கூறுவதுபோல் யாரையும் நான் ஆம்புலன்சில்திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை என்றால் சரியல்ல.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்
விசாரணை நீதிமன்றம், மதுரை.